10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 264 திங்கட்கிழமை பெப்ரவரி 12 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## மைத்திரி, ரணில் பதவி விலகுக!

கொழும்பு, பெப்.12

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெரு வெற்றியைப் பெற்றுள்ளதால், ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் உடனடியாகப் பதவி விலகவேண்டுமென ஒன்றிணைந்த எதிரணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரியால

06▶

# வீடும், சைக்கிளும் இணைந்து ஆட்சி?

## ஒரே கொள்கையுடையோர் ஒன்றிணைய வேண்டும்

### கூட்டமைப்பு அழைப்பு



யாழ்ப்பாணம், பெப்.12

"தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வொன்றை காணும் வகையில் அதற்கான தீர்வாக சமஷ்டி அடிப்படையிலான புதிய அரசியலமைப்பு ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக அதே கொள்கையில் பயணிக்கின்ற தமிழ்க்கட்சிகள் தற்போது ஒன்றாக பயணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது" என்று தமிழ்த் தேசியக்

06▶



யாழ்ப்பாணம், பெப்.12

தமிழ் அரசியல் பரப்பில் இரு வேறு துருவங்களாகக் கருதப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கூட்டாக உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தைப் பகிர்வதற்கான சாத்தியங்கள் அதிகரித்துள்ளன.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கில் உள்ள பல உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைப் பெற்ற போதும், அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சியமைக்க இன்னொரு கட்சியோடு கைகோர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. யாழ்.மாநகரசபை உள்ளிட்ட பல உள்ளூராட்சி சபைகளில் இவ்வாறான தொங்கு சபை நிலையே காணப்படுகின்றது.

இந்த நிலையில் ஈ.பி.டி.பி., ஐ.தே.க, சுதந்திரக்கட்சி என்பவற்றுடன் கூட்டணி வைத்து ஆட்சியில் அமர்வதற்கு, கூட்டமைப்பின் கொள்கை இடம் கொடுக்காது என்பதோடு, எதிர்காலத்தில் கூட்டமைப்பு மீதான மக்களின் அதிருப்தியும் அதிகரிக்கும். எனவே இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு பேச்சு

06▶

## கூட்டமைப்போடு நாம் இணையத் தயார். ஆனால்.....?



யாழ்ப்பாணம், பெப்.12

"தமிழ் மக்களை நடுத்தெருவில் விட்டதோடு, ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு இணங்கி, இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டு தமிழ் மக்களுக்கு நம்பிக்கை துரோகமிழைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து, அதில் அங்கத்துவம் வகிக்கின்ற கட்சிகளின்

06▶

### உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் யாழ். மாவட்டம் ஒரே பார்வையில்

| சபைகள் | மொத்தம் | அ.இ.த.கா. | இ.த.அ.க. | ஈ.பி.டி.பி. | ஐ.தே.க. | ஸ்ரீல.சு.க. | த.வி.கூ. | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்.மாநகரம் | 45 | 13 | 16 | 10 | 3 | 2 | 1 | 0 |
| நல்லூர் | 20 | 5 | 6 | 4 | 1 | 1 | 1 | 2 |
| சாவகச்சேரி நகரம் | 18 | 6 | 5 | 3 | 1 | 2 | 0 | 1 |
| சாவகச்சேரி பிரதேசம் | 28 | 6 | 13 | 4 | 2 | 3 | 2 | 1 |
| பருத்தித்துறை நகரம் | 15 | 6 | 5 | 2 | 0 | 0 | 1 | 1 |
| பருத்தித்துறை பிரதேசம் | 21 | 4 | 8 | 3 | 1 | 2 | 2 | 1 |
| வட தென் மேற்கு | 30 | 7 | 9 | 3 | 2 | 7 | 3 | 0 |
| வல்வெட்டித்துறை நகரம்15,2 | 17 | 2 | 7 | 2 | 0 | 1 | 1 | 4 |
| வலி வடக்கு | 39 | 6 | 17 | 8 | 2 | 4 | 2 | 0 |
| வலி தெற்கு | 30 | 6 | 11 | 4 | 3 | 4 | 2 | 0 |
| வலி கிழக்கு | 36 | 6 | 16 | 6 | 1 | 0 | 3 | 4 |
| வலி மேற்கு | 25 | 6 | 9 | 4 | 3 | 1 | 0 | 2 |
| வலி தென் மேற்கு | 28 | 4 | 12 | 7 | 2 | 1 | 2 | 0 |
| ஊர்காவற்றுறை | 13 | 1 | 5 | 7 | 0 | 0 | 0 | 0 |
| வேலணை | 20 | 1 | 8 | 6 | 1 | 1 | 0 | 2 |
| காரைநகர் | 10 | 1 | 3 | 2 | 2 | 0 | 0 | 3 |
| நெடுந்தீவு | 13 | 0 | 4 | 6 | 1 | 0 | 0 | 2 |
| மொத்த ஆசனங்கள் | 408 | 80 | 154 | 81 | 25 | 29 | 20 | 23 |

## "நாடாளுமன்றத்துக்கு தேர்தலை நடத்துங்கள்"

கொழும்பு, பெப்.12

"ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியில் இருந்து விலகவேண்டும் . மக்களின் விருப்பத்திற்கு தலை சாய்த்து நாடாளுமன்றத்தைக் கலைத்து நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும்" என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"நாட்டு மக்கள் அரசாங்கத்துக்குத் தெளிவான தகவல் ஒன்றை வழங்கியுள்ளனர். இந்த அரசாங்கம் முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களை மக்கள் வெறுத்துள்ளனர். வாழ்க்கைச் செலவு, நாட்டைப் பிரித்தல், நாட்டின் தேசிய வளங்களை விற்றல் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்தல்

06▶

## குப்பிளானில் குலுக்கல் அதிர்ஷ்ட வேட்பாளர்

யாழ்ப்பாணம், பெப்.12

வலிகாமம் தெற்கு பிரதேசசபைத் தேர்தலில், குப்பிளான் வட்டாரத்தில் திருவுளச் சீட்டுக் குலுக்கலின் மூலம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இங்கு அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பன, தலா 314 வாக்குகளைப் பெற்று சமநிலையில் இருந்தன.

இதனால், தேர்தல் விதிமுறைகளின் படி, வாக்கு

06▶

## மகிந்தவின் சகாவுக்கு பொலிஸ் குடைச்சல்

கொழும்பு, பெப்.12

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஊடக ஒருங்கிணைப்பாளர் ரொஹான் வெலிவிட்டவின் வீட்டுக்கு நேற்றுப் பிற்பகல் பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் சென்றிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீ. எஸ்.என். அலைவரிசையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடித் தொடர்பான வாக்கு மூலத்தை வழங்கவதற்காக எதிர்வரும் 13ஆம் திகதி



நிதிக்குற்ற விசாரணைப் பிரிவுக்கு வருகை தருமாறு பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் இதன்போது ரொஹான் வெலிவிட்டவிடம் தெரிவித்துள்ளனர்.

ரொஹான் வெலிவிட்ட பத்தரமுல்லையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுனவின் கட்சித் தலைமையகத்துக்குச் சென்றிருந்த சந்தர்ப்பத்திலேயே பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப்பிரிவு அதிகாரிகள் ஹோமாகமையில் உள்ள தனது வீட்டுக்குச் சென்றுள்ளமைத் தொடர்பில் தனக்கு தெரிய வந்ததையடுத்து, உடனடியாக வீட்டுக்கு தான் சென்றதாக ரொஹான் வெலிவிட்ட தெரிவித்துள்ளார். (அ)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள்

## யாழ்ப்பாணம்

| வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 6,206 | 9 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 5,232 | 7 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 5,129 | 7 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 2,264 | 3 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 1,975 | 3 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,109 | 2 |

| சாவகச்சேரி நகர சபை | | |
|---|---|---|
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 2,779 | 6 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 2,481 | 5 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 1,372 | 3 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 1,029 | 2 |
| தமிழர்களுக்கான சமூக ஜனநாயகக் கட்சி | 518 | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 344 | 1 |

| வல்வெட்டித்துறை நகர சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 1,322 | 7 |
| சுயேட்சைக் குழு | 1,069 | 4 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 659 | 2 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 619 | 2 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 230 | 1 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 187 | 1 |

| வலிகாமம் தெற்கு பிரதேச சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 8,963 | 11 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 5,401 | 6 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 3,295 | 4 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 2,990 | 4 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,775 | 3 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,447 | 2 |

| ஊர்காவற்றுறை பிரதேச சபை | | |
|---|---|---|
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 2884 | 7 |
| அகில இலங்கை தமிழரசுக் கட்சி | 1982 | 5 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 548 | 1 |

| வலிகாமம் தெற்கு மேற்கு பிரதேச சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 10,641 | 12 |
| ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி | 6,305 | 7 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 4,083 | 4 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 2,216 | 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,492 | 2 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 652 | 1 |

| வலிகாமம் கிழக்கு பிரதேச சபை | | |
|---|---|---|
| அகில இலங்கை தமிழரசுக் கட்சி | 12,300 | 13 |
| ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி | 6,366 | 6 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 5,649 | 6 |
| சுயேட்சைக் குழு | 3,858 | 4 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 3,294 | 3 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 2,703 | 3 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 884 | 1 |

| வேலணை பிரதேச சபை தேர்தல் | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 3,627 | 8 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 2,891 | 6 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 899 | 2 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 737 | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 403 | 1 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 345 | 1 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 306 | 1 |

| நல்லூர் பிரதேச சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 5,953 | 6 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 4,339 | 5 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 3,562 | 4 |
| சுயேட்சைக் குழு | 1,983 | 2 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 903 | 1 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 716 | 1 |

| வலிகாமம் மேற்கு பிரதேச சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 8,119 | 9 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 5,638 | 6 |
| ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி | 3,511 | 4 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 3,109 | 3 |
| சுயேட்சைக் குழு | 1,408 | 2 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 1,279 | 1 |

| காரைநகர் பிரதேச சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 1,623 | 3 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,263 | 2 |
| ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி | 1,197 | 2 |
| சுயேட்சைக் குழு | 1,080 | 3 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 359 | 1 |

| பருத்தித்துறை நகர சபை | | |
|---|---|---|
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 2,199 | 6 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 1,880 | 5 |
| ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி | 777 | 2 |
| சுயேட்சைக் குழு | 404 | 1 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 403 | 1 |

| சாவகச்சேரி பிரதேச சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 9,672 | 13 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 5,732 | 6 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 3,799 | 4 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 2,312 | 3 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,935 | 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,540 | 2 |
| தமிழர்களின் சமூக ஜனநாயக் கட்சி | 758 | 1 |

| நெடுந்தீவு பிரதேச சபை | | |
|---|---|---|
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 1,246 | 6 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 808 | 4 |
| சுயேட்சைக் குழு | 292 | 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 97 | 1 |

| பருத்தித்துறை பிரதேச சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 6,532 | 8 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 3,897 | 4 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 3,588 | 3 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 2,049 | 2 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,830 | 2 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 912 | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 795 | 1 |

| வலிகாமம் வடக்கு | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 9414 | 17 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 3935 | 06 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 5621 | 08 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1775 | 02 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 3131 | 04 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1081 | 02 |

| யாழ். மாநகர சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 14, 424 | 16 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 12,020 | 13 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 8,671 | 10 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,423 | 3 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 1,479 | 2 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,071 | 1 |

## முல்லைத்தீவு

| கரைதுறைப்பற்று பிரதேச சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 6292 | 9 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2833 | 3 |
| சுயேட்சை குழு | 2636 | 3 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 2067 | 2 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1819 | 2 |
| ஈழ மக்கள் ஜனநாயக கட்சி | 1686 | 2 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி | 1235 | 1 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 985 | 1 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 962 | 1 |

| துணுக்காய் பிரதேச சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 2783 | 6 |
| ஐக்கியதேசியக் கட்சி | 1084 | 3 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி | 685 | 2 |
| தமிழர் விடுதலைக்கூட்டணி | 606 | 1 |
| ஈழ மக்கள் ஜனநாயக கட்சி | 295 | 1 |

| புதுக்குடியிருப்பு பிரதேச சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 11771 | 11 |
| சுயேட்சை குழு 4463 | 4 | 3 |
| ஐக்கியதேசியக்கட்சி | 2857 | 2 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 2136 | 2 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 1541 | 1 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1030 | 1 |
| ஈழ மக்கள் ஜனநாயக கட்சி | 911 | 1 |

| மாந்தை கிழக்கு பிரதேச சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 1836 | 6 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1505 | 4 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 523 | 2 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 192 | 1 |

## கிளிநொச்சி

| கரைச்சி பிரதேச சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 21,445 | 17 |
| சுயேச்சைக்குழு( கேடயம்) | 14,489 | 12 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 2,433 | 2 |
| ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி | 1,899 | 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,570 | 1 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 1,224 | 1 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 976 | 1 |

## கொழும்பு

| கொழும்பு மாநகர சபை | | |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 131353 | 60 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 60087 | 23 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு | 31421 | 12 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 192 | 1 |

எதிரொலி
Ethiroli
திங்கள். 12 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

# ஒன்றாக வேண்டிய தருணமிது!

இலங்கையில் மிகப்பெரிய அரசியல் பூகம்பம் வெடித்திருக்கிறது. "இது சாதாரண உள்ளூராட்சி சபை தேர்தல்கள் தானே" – என்று தலையை திருப்பிக்கொண்டிருந்த அனைவருக்கும் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் பிடரியை பொத்தி அடித்திருக்கின்றன. அந்த வலியைக்கூட தாங்கிக்கொள்ளலாம் என்றால் ஒட்டுமொத்த நாட்டையே விழுங்குவதற்கு விஸ்வரூபம் எடுத்திருக்கும் பெரும்பூதம் ஒன்று மீண்டும் நிலத்தை பிளந்துகொண்டு கிளம்பியிருக்கிறது.

ஆம்! உக்கிரமான விக்கிரமாதித்தன் மகிந்தவின் மீள் எழுச்சி இலங்கையில் கிட்டத்தட்ட மீண்டும் சாத்தியமாகிவிட்டது. இனிவரப்போகும் நாட்களும் வாரங்களும் மாதங்களும் இலங்கை அரசியலில் பரபரப்புக்கு பஞ்சமிருக்காது என்பதை தற்போது ஆரம்பமாகியிருக்கும் பல சம்பவங்கள் ஆருடம் கூறத்தொடங்கிவிட்டன.

நடைபெற்று முடிந்திருப்பது எனன?

1) நடந்த முடிந்த தேர்தலில் மகிந்தவின் அணி பெற்றிருக்கும் 44 சதவீத மக்கள் ஆதரவு 10 வீதம் பெற்ற மைத்திரி அணியையும் 31 சதவீதம் பெற்ற ஐக்கிய தேசிய கட்சியையும் சுண்டு விரலால் தூக்கியெறிந்திருக்கிறது. இந்த நிலையில், ஏற்கனவே அறுநூறு துண்டுகளாக பிளந்துபோயிருக்கும் சிறுபான்மை கட்சிகளில் எவற்றை பிடித்து ஆதரவை தேடுவது – யாரோடு கூட்டணி அமைத்து இப்போது அரசை காப்பாற்றுவது என்று தெரியாமல் ஆளும் மைத்திரி – ரணில் அரசு கடந்த 24 மணிநேரமாக கோமாவில் கிடக்கிறது.

2) தேர்தல் முடிவுகள் வெளிவந்தவுடனேயே மைத்திரி அணியில் உள்ள ஏழு அமைச்சர்கள் மகிந்த பக்கம் தாவி தங்களது பழைய அண்ணாச்சியை வலுப்படுத்துவதற்கு முடிவெடுத்துவிட்டார்கள் என்றும் அவர்கள் வேட்டியை தூக்கிப்பிடித்துக்கொண்டு தருணத்துக்கு காத்துக்கிடப்பதாகவும் கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

3) இந்நிலையில் "சிறிலங்கா சுதந்திர கட்சியின் சிரிப்பழகர்" பஸில் ராஜபக்சவை பிடித்து 'அண்ணனிடம் பேசி நீங்கள்தான் ஏதாவது செய்யவேண்டும்" – என்று சமரசம் செய்யப்போயிருக்கிறார்கள் மைத்திரி அரசு தரப்பினர். "பிர–தமர் பதவி தருகிறோம், பிட்ஸா வாங்கி தருகிறோம்" – என்று காலில் விழுந்தார்களாம். ஆனால், மகிந்தவுடன் பேசிவிட்டு வந்த பஸில், காலில் விழுந்தவர்களை தூக்கி சேர்ட்டில் இருந்த மண்ணைத்தட்டிவிட்டு "அவசரகால தீர்மானம்" ஒன்றை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவந்து நிறைவேற்றிவிட்டு தேர்தலுக்கு அறிவிக்குமாறு ஆலோசனை கூறி அனுப்பியிருப்பதாக தெரியவருகிறது.

4) மொத்தத்தில், மகிந்த கொடுத்த அடியில் தெற்கு பழையபடி வீங்கிப்போயிருக்கிறது. கூட்டு அரசொன்றில் பல காலமாக பொத்தி பொத்தி வைத்திருந்த பலநூறு உட்கட்சி பூசல்களும் அதிகார கெடுபிடிகளும் சரியான நேரம் பார்த்து வெடித்திருக்கின்றன. கான்ஸர் பிடித்த அரசாங்கத்தை காயம்பட்ட அரசாங்கம் போல போலியாக வெளியே காண்பித்து சிரித்துக்கொண்டிருந்த ரணிலுக்கும் – மைத்திருக்கும் தெற்கு மக்கள் மூக்கிலேயே குத்தியிருக்கிறார்கள். அரசாங்கத்தை உருப்படியாக நடத்தத்தெரியாததற்கு மட்டுமல்லாமல், பொருளாதார பின்னடைவுகள் – ஊழல் குற்றச்சாட்டுகள் – வேலைவாய்ப்பு பிரச்சினைகள் என்று எல்லாவற்றுக்கும் சேர்த்து பெரிய இடியாக இறக்கிவிட்டிருக்கிறார்கள்.

சரி! இப்போது தமிழர் தரப்பின் பிரச்சினைக்கு வருவோம்.

1) நடந்து முடிந்திருக்கும் இந்த பிரச்சினையால் தமிழர் தரப்பு நாடாளுமன்றில் எதிர்க்கட்சி என்ற பலத்தை இழந்து கொள்கிறது. மகிந்தவின் பரிவாரங்கள் எவ்வாறு பாற்சோறு ஊட்டி இந்த வெற்றியை கொண்டாடுகிறார்களோ, அதே போல சம்பந்தர் தரப்புக்கு பனடோல் கொடுக்கவேண்டிய பெரும் இடியை இந்த தேர்தல் ஏற்படுத்திவிட்டது.

2) போனது எதிர்க்கட்சி தகுதி மட்டும்தானா என்பவர்கள் இன்னுமொரு அதிர்ச்சிகரமாக உண்மையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது, இலங்கையின் அரசியல் செல்வழியை தீர்மானிக்கும் சக்தி என்ற வகிபாகத்திலிருந்தும் தற்போது தமிழர் தரப்பு தூக்கியெறிப்பட்டிருக்கிறது. மைத்திரி – ஐ.தே.க. – மகிந்த அணிகள் மீண்டும் பந்தைய குதிரைகளாக இறங்கியிருக்கும் களத்தில் சம்பந்தரும் ஏனைய சிறுபான்மை கட்சியினரும் ஓரமாக நின்று வேடிக்கை பார்க்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். இன்னொரு வகையில் கூறுவதானால், தமிழர் தரப்பின் சத்தங்களுக்கு தென்னிலங்கை இனிமேல் காதுகொடுக்கவேண்டிய எந்த கடப்பாடும் இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

3) அப்படியானால், தீர்வு – இடைக்கால அறிக்கை – அபிவிருத்தி – ஏக்ய ராஜ்ய...எல்லாம் இல்லையா என்றால், இப்படியெல்லாம் பேசிக்கொண்டு இனிமேல் மதவாச்சி தாண்டினாலே மண்டையில்போட்டு அனுப்புவார்கள். அவ்வளவுக்கு தென்னிலங்கையின் பிரச்சினை வேறு திசையில் முற்றாக திரும்பியிருக்கிறது. இவ்வளவு காலமும் கிடைத்தவைகள்தான் தமிழர் தரப்பின் இப்போதைய அடைவுகளே தவிர, இனிமேல் என்ன கிடைக்கும் என்று யாருக்குமே தெரியாது. ஏன், தென்னிலங்கை தரப்புக்களுக்கே தமக்கு என்ன கிடைக்கப்போகிறது என்று தெரியாமலிருக்கும் இந்த நேரத்தில் தமிழர் தரப்பைப்பற்றி அவர்கள் நேற்றிரவே மறந்திருப்பார்கள்.

தமிழர் தரப்பு இனி செய்யவேண்டியதும் முன்பு செய்திருக்கவேண்டியதும் என்ன?

1) ஏகப்பட்ட சிக்கல்களினால் பிளந்து தொங்கிக்கொண்டிருந்தபோதும் இழுத்துக்கட்டி வைத்திருந்த இந்த கூட்டரசாங்கம் எப்பவோ ஒருநாள் கவிழப்போகிறது என்பதை பல தரப்புக்கள் தமிழ் அரசியல் தலைமைகளுக்கு எச்சரிக்கை செய்திருந்தன. அவற்றுக்கு என்ன முன்னாயத்தங்கள் எம்மிடம் உள்ளன? அல்லது அவ்வாறு முறிந்து விழுவதற்கு முதல் அந்த அரசாங்கத்துக்கு கொடுக்கும் ஆதரவை மீள்பரிசீலனையாவது செய்யவேண்டாமா – கேட்கும் விடயங்களையாவது துரிதமாக பெற்றுக்கொள்ளவேண்டாமா என்று கேள்விகள் எழுப்பியிருந்தன. ஆனால், தமிழ் அரசியல் தலைமைகள், தொடர்ந்தும் தங்களது நிலைப்பாட்டையும் அரசாங்கத்தின் நிலைத்தன்மையையும் நம்பிக்கொண்டேயிருந்தார்கள். தங்களது அடுத்த தெரிவு குறித்து அவர்கள் பேசிக்கொள்ளவும் இல்லை.

ஆக, தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய அரசியல் சூறாவளியால் காற்றுப்போயுள்ள தமிழர் தரப்பு பலூனை மீண்டும் ஊதிப்பெருப்பித்து கொழும்பில் கொண்டுபோய் கட்டுவதற்கு தமிழ் கூட்டமைப்பிடம் உளள இரகசிய சூத்திரத்தை இப்போதாவது மக்களுடன் கலந்தாலோசனை செய்யவேண்டும். இவ்வளவு காலமும் முண்டுகொடுத்துக்கொண்டிருந்த அரசாங்கமே விழுந்து முறிந்திருக்கும் இந்த நிலையில் இன்னமும் அந்த அரசாங்கத்தின் உடைசல்களுக்குள் ஓடிப்பிடித்து விளையாடிக்கொண்டிராமல், முழுக்க முழுக்க மக்கள் பலத்துடன் தங்களை மீள்நிலைப்படுத்தும் மேலதிகள செயற்பாடுகளில் இறங்கவேண்டும்.

2) தெற்கில் சிங்கள தரப்புக்கள் தற்போது ஆட்சியை மீள்நிலைப்படுத்துவதற்கு எப்படியாவது – யாருடனாவது – கூட்டணி அமைக்கவேண்டும் என்று அந்தரித்துக்கொண்டிருக்கும் இந்த வேளையில் – மகிந்தவின் மீள்பிரவேசம் வியாபித்து எழுந்து வருகின்ற இந்த நேரத்தில் – தமிழர் தரப்புக்கள் வடக்கு – கிழக்கில் உடனடியாக ஒன்றிணைய வேண்டும். சின்னம் – பின்னம் என்று பார்த்துக்கொண்டிராமல் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஓரணியில் நின்று தெற்கின் புதிய சமன்பாடுகளுக்கு விடையெழுதுகின்ற அரசியல் வீரத்தை பதிவு செய்யவேண்டும். (இது எவ்வாறு, எந்த ஆள்கூற்றுத்தளத்தில் நடைபெறவேண்டும்' என்பதெல்லாம் தமிழர் தரப்பின் பரந்துபட்ட ஆலோசனைத்தளத்தில் பேசி தீர்மானிக்கப்படவேண்டும்)

3) தற்போதைய சூழ்நிலை நிச்சயமாக மீண்டும் இந்திய – மேற்குல சக்திகளை இலங்கை விவகாரத்தில் தலையிடப் பண்ணலாம். தமக்கு ஒவ்வாத ஆட்சியொன்று மீண்டும் வரு–வதை அவர்கள் விரும்பமாட்டார்கள் ஆதலால், அதற்காக அவர்கள் சில முன்முடிவுகளோடு தமிழர் தரப்பினையும் அணுகலாம். இந்த சந்தர்ப்பங்களை தமிழ் மக்களின் நலன் நோக்கி திருப்புவதற்கான துரித நிபந்தனைகளோடு தமிழர் தரப்பு அணுகவேண்டுமே தவிர, இனியும் கால தாமதங்களின்மீது மக்களை திருப்பலி கொடுக்க முடியாது.

உடனடியாகவோ, அல்லது நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ள அடுத்த மாகாணசபை தேர்தலுக்கு முன்பாகவோ எரிமலையாக வெடிக்கவுள்ள இலங்கையின் அரசியல் தீக்குழம்பினை எதிர்த்து நிற்பதற்கு தமிழர் தரப்பிற்கு முன்பாக வந்திருக்கும் அடுத்த சவால் இது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# பேரணிக்குத் தடை!

கொழும்பு, பெப்.12

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் முடிவுகள் வெளியாகிய நிலையில் பேரணிகள் செல்வது மற்றும் தேர்தல் சட்டங்களை மீறுவது போன்றவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கூறினார்.

தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்டத்தை அமுல்படுத்துவதற்காக பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அதேநேரம் தேர்தலுக்கு பிந்திய காலப்பகுதியில் அமைதியான நிலமை காணப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். (அ)

# ஜனாதிபதி தீர்மானிக்கட்டும்

கொழும்பு, பெப்.12

வெளியாகியுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன், மக்களின் அபிப்பிராயங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த எதிர்கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எனவே எதிர்காலத்தில் என்ன செய்ய வேண்டுமென்பதை ஜனாதிபதி தீர்மானிக்க வேண்டும் என்றும், பிரதமரை பதவி நீக்கிவிட்டு புதிய அரசாங்கத்தை அமைப்பதுக்கான தேவையான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# கோத்தாவுக்கு ஆனந்தம்

கொழும்பு, பெப்.12

மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது என்பது இம்முறை தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டியுள்ளன என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில், தனது உத்தியோகப்பூர்வ பேஸ்புக் வலைத்தளத்தில் அவர் பதிவொன்றை இட்டுள்ளார்.

"எமது தாய்நாட்டின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து விட்டுக் கொடுப்புடன், சகல தடைகளையும் தகர்த்தெறிந்து இந்த வெற்றியைப் பெறுவதற்கு ஒத்துழைப்பை வழங்கிய அனைத்து இலங்கையர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கின்றேன்,

மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது என்பதை இந்த வெற்றி நிரூபித்துள்ளது" என அவர் பதிவிட்டுள்ளார். (அ)

# மகிந்தவுக்கு புகழாரம்

கொழும்பு, பெப்.12

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் நடப்பு அரசாங்கத்துக்கு அகௌரவத்தினையே பெற்றுக்கொடுத்துள்ளது என பிரிட்டனைத் தளமாக கொண்டு வெளிவரும் டெய்லி மெய்ல் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் தேர்தல், நடப்பு அரசாங்கத்தினை பரிசீலனைக்குட்படுத்தும் நடவடிக்கையாகும் எனவும், அந்தப் பத்திரிகை விமர்சித்துள்ளது.

"நல்லாட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையிலான அரசியல் உறவானது மேலும் நலிவுற்று போகலாம் என்பதனையே தேர்தல் முடிவுகளில் காணக் கூடியதாக உள்ளது." என்றும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆதரவினைப் பெற்றுக்கொண்டுள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சமகால அரசியலில் பாரிய வெற்றியினைக் கண்டுள்ளதாக இந்திய என். டி. ரீ.வி செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த 3 தசாப்தங்களாகக் காணப்பட்ட யுத்தத்தினை நிறைவுக்கு கொண்டு வந்தமையினாலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு இலங்கை மக்கள் ஆதரவினை வழங்கியுள்ளனர் எனவும் அந்தச் செய்திச் சேவை மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## இன்று நாளும் கோளும்

12.02.2018 திங்கட்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 30 ஆம் நாள்
துவாதசி பி.ப. 10.05 மணி வரை | பூராடம் 03.49 வரை
இராகுகாலம் 07.30 - 09.00 | சுபநேரம் மு.ப. 09.30 - 10.30 | எமகண்டம் மு.ப. 10.30 - 12.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நலம் | நன்மை | நற்செயல் | தடங்கல் | ஆர்வம் | சாந்தம் | செலவு | குழப்பம் | வெற்றி | இன்பம் | விவேகம் | இரக்கம் |

# ஆட்சி மாறுமா?



உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் யாரும் எதிர்பார்த்திராத பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளன. சுந்திரக் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவு ஐக்கிய தேசிய கட்சிக்கு மிக இலகுவான வெற்றியைக் கொடுக்கும் என்ற கணிப்புகளும் சுதந்திரக் கட்சியும் மஹிந்தவின் கட்சியும் சில இடங்களில் இரண்டாமிடத்துக்கும் சில இடங்களில் மூன்றாமிடத்துக்கும் மாறி மாறி வரும் என்றும் கணிக்கப்பட்ட கணிப்புகள் எல்லாம் பொய்யாகி விட்டன.

2015 தேர்தலில் இந்த நாட்டு மக்கள் எவ்வாறு ஊழல், மோசடிக்கு எதிராக வாக்களித்தார்களோ அவ்வாறுதான் இந்தத் தேர்தலிலும் செயற்பட்டிருக்கின்றனர். மஹிந்த அரசின்மீது இருந்த அதிருப்தியை–வெறுப்பை வெளிக்காட்டுவதற்காக எப்படி மைத்திரியை ஆதரித்தார்களோ அதேபோல்தான் இந்த அரசின்மீது இருந்த வெறுப்பை வெளிக்காட்டுவதற்காக மக்கள் இந்தத் தேர்தலில் மஹிந்தவை ஆதரித்துள்ளனர்.

அதாவது புதிய திருடர்களுக்கு பாடம் புகட்டுவதற்காக மீண்டும் பழைய திருடர்களை மக்கள் ஆதரித்ததுள்ளனர். இந்த அரசு நல்ல பாடம் ஒன்றைக் கற்றுள்ளது. இந்தப் பாடத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டால் மாத்திரமே இனி வரும் தேர்தலில் அதாவது நாடாளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சிகளால் வெற்றி பெற முடியும்.

### தோல்விக்கான காரணம்

மஹிந்தவின் ஆட்சியில் ஊழல். மோசடிகள் தலை விரித்தாடின. விலைவாசிகளும் வீண் விரயமும் அதிகரித்தன. ஜனநாயக மீறல்களுடன்கூடிய குடும்ப ஆட்சி நிலைத்து நின்றது. கடன் சுமை அதிகரித்தது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து கொண்டு சென்றது.

இந்த ஆபத்தில் இருந்து நாட்டை பாதுகாப்பதற்காக மஹிந்தவை விரட்டியடிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு மக்கள் வந்தனர். அதன் விளைவு மஹிந்த தோற்கடிக்கப்பட்டு மைத்திரி ஜனாதிபதியானார். சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் இணைத்து நல்லாட்சி என்ற பெயரில் ஆட்சி அமைத்தன.

மக்கள் பிரதானமான இரண்டு விடயங்களை இந்த ஆட்சியில் எதிர்பார்த்தனர். முதலில் மஹிந்த ஆட்சியின் திருடர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இந்த ஆட்சியில் திருட்டுக்கள் இடம்பெறாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த இரண்டும்தான் மக்கள் இந்த அரசிடம் இருந்து எதிர்பார்த்த விடயங்களாகும்.

ஆனால், ஆட்சி அமைத்து வெகு சீக்கிரத்திலேயே இந்த எதிர்பார்ப்புகளுக்கு ஆப்பு விழத் தொடங்கியது. மஹிந்தவின் அரசுடன் ஒப்பிடுகையில் தாம் எந்த வகையிலும் சளைத்தவர்கள் அல்லர் என்று காட்டுவதுபோல் இந்த அரசின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

மஹிந்தவின் ஆட்சியில் இருந்த திருடர்களை பிடிப்பதற்கு இந்த அரசில் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வெறும் கண் துடைப்புக்காக ஓரிருவர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் சில நாட்கள் வைக்கப்பட்ட பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள்கூட சிறுபிள்ளைத்தனமானதாகவே இருந்தன.

மஹிந்தவின் பெரிய பெரிய திருட்டுக்களை அப்படியே விட்டுவிட்டு உப்புச்சப்பற்ற சில விடயங்களை காட்டி இவைதான் அவர்கள் செய்த





திருட்டுக்கள் எனக் கூறி மஹிந்தவின் சகாக்கள் சிலரை சில நாட்கள் உள்ளே போட்டு எடுத்தனர். ஆனால், பெரிய திருட்டுக்களை வேண்டுமென்றே இந்த அரசு அப்படியே விட்டுவிட்டது.

அரசின் இந்த சிறுபிள்ளைத்தனமான செயற்பாட்டை மஹிந்த அணியினர் அவர்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கினர். அதை அரசியல் பழிவாங்கலாக மக்களிடம் காட்டினார்.மக்கள் நம்பும் வகையில் அவை அமைந்திருந்தன.

திருடர்களை பிடிப்பார்கள் என்ற நம்பிக்கையில் இந்த அரசுக்கு வாக்களித்த மக்கள் இதனால் அதிருப்தியடைந்தனர். இதுபோக, திருடர்களை பிடிக்க வந்த அரசே திருட்டில் ஈடுபட்டமைதான் மக்களுக்கு இந்த அரசின்மீது மேலும் வெறுப்பை ஏற்படுத்தியது.

மத்திய வங்கியின் பிணை முறி மோசடி இந்த அரசின் மிகப் பெரிய திருட்டாக சந்தைப்படுத்தப்பட்டது. இந்தத் திருடர்களைக் காப்பாற்றுவதற்காக ஐக்கிய தேசிய கட்சி எடுத்த வெளிப்படையான நடவடிக்கைகள் அனைத்தையும் மக்கள் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

பிணை முறி மோசடியை ஒரு சிறு சம்பவம்போல் காட்டுவதற்கும் அதன் சூத்திரதாரிகளான அர்ஜுனன் மஹேந்திரனையும் ஆலோசியஸையும் காப்பாற்றுவதற்கும் பிரதமர் இப்போதுவரை போராடி வருகின்றார். அவர்களைத் திருடர்களாக ஏற்றுக்கொள்வதற்கு ரணில் தயாரில்லை. ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் இந்தத் திருடர்களை பாதுகாப்பதுபோலவே பேசி வருகின்றனர்.

மறுபுறம், பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்துள்ளது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் ஏற்பட்ட விரக்தி மக்களை மீண்டும் மஹிந்தவின் பக்கம் தள்ளியுள்ளது. புதிய திருடனை விட பழைய திருடன் பரவாயில்லை என்ற முடிவுக்கு மக்கள் வந்துள்ளனர் என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

### நடக்கப்போவது என்ன?

சுதந்திர கட்சிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஏற்பட்டுள்ள இந்த தோல்வியானது இவர்களின் பலவீனத்தையும் ஊழல், மோசடிகள் தொடர்பில் இவர்கள் விட்ட பிழையையும் காட்டுகின்றது. அர்ஜுன மஹேந்திரன் தன் நண்பன் என்ற ஒரே காரணத்துக்காக–அவரைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கூட தாரை வார்த்த பிரதமருக்கு இந்தத் தோல்வி மிகப் பெரிய அடியாகும்.

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்தால் பொருளாதாரம் அபிவிருத்தியடையும்–மக்களிடம் பணம் புரளும்–திருட்டுக்கள் இடம்பெறாது என்று பொதுவான கருத்துக்களை பிழையாக்கிய பெருமை ரணிலுக்கே சாரும். Mr.Clean என்ற பட்டப் பெயருக்கு ரணில் இனி உரித்தானவர் அல்ல என்பது இந்தத் தேர்தல் முடிவின் மூலம் உணரப்படுகின்றது.

இனி இருக்கின்ற இரண்டு வருட ஆட்சிக்குள் அரசையும் கட்சிகளையும் பலப்படுத்த வேண்டிய கட்டாயம் மைத்திரிக்கும் ரணிலுக்கும் ஏற்பட்டுள்ளது. அடுத்து வரும் தேர்தல்களில் வெற்றிபெற வேண்டுமென்றால் எஞ்சியுள்ள காலப்பகுதிக்குள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் பலவற்றை எடுத்தாக வேண்டும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரியோ அல்லது ரணிலோ வெல்ல முடியாது என்பது இப்போது தெளிவாகத் தெரிகின்றது. இதனால் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க வேண்டிய கட்டாயம் இவர்கள் இருவருக்கும் ஏற்பட்டுள்ளது. *(4ஆம் பக்கம் பார்க்க)*



# ரஷ்ய விமானம் சிதறியது

## 71 பேர் பலி

மொஸ்கோ, பெப்.12

ரஷ்யாவின் சராடோவ் விமான சேவையைச் சேர்ந்த விமானமொன்று, தலைநகர் மொஸ்கோவுக்கு அருகில் நேற்று விபத்துக்குள்ளாகியதில், அதில் பயணித்த 71 பேரும் பலியாகினர் என, சர்வதேச செய்திச் சேவைகள் தெரிவித்தனர்.

விமானத்தில் 65 பயணிகளும் 6 விமானப் பணியாளர்களும் இருந்துள்ளனர்.

மொஸ்கோவின் டொமோடெடோவோ விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட இவ்விமானம், 10 நிமிடங்களில், ரேடாரிலிருந்து காணாமல் போனது எனவும், அதன் பின்னரே அது விபத்துக்குள்ளானமை கண்டுபிடிக்கப்பட்டது எனவும், அதிகாரிகள் தெரிவித்தனர்.

பனியால் சூழப்பட்ட நிலையில், அவ்விமானம் விபத்துக்குள்ளாகியிருந்த காட்சிகளை, ரஷ்ய அரச தொலைக்காட்சி காண்பித்தது.

"சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எவரும் தப்பவில்லை" என, அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

என்ன காரணத்துக்காக விபத்து ஏற்பட்டது என்பது தெளிவாகத் தெரியவில்லை. மோசமான வானிலை, விமானியின் தவறு உள்ளிட்ட காரணங்களை ஆராய்ந்து வருவதாக, ரஷ்ய போக்குவரத்து அமைச்சுத் தெரிவித்தது.

விபத்தை நேரில் கண்டவர்களின் கருத்துப்படி, எரிந்தவண்ணம் வானத்திலிருந்து விமானம் கீழே விழுந்ததாகத் தெரிவித்தனர். (அ)

# தாவுகிறார் அமைச்சர் சுசில்



கொழும்பு, பெப்.12

நல்லாட்சி அரசாங்கத்தின் விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சரான சுசில் பிரேமஜயந்த நேற்றுப் பிற்பகல் முன்னாள் ஜனாதிபதியை மகிந்தவைச் சந்தித்துள்ளார்.

இவருடன் மேலும், 7 உறுப்பினர்களும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை சந்தித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணையவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த எதிர்வரும் சில நாட்களில் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதேவேளை, தேர்தல் முடிவுகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளமை தொடர்பில் அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதியை அலைபேசியில் அழைத்து தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# தண்டிக்காமையே பின்னடைவு



கொழும்பு, பெப்.12

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தண்டனை வழங்கத் தாமதமாகியமையே, உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின் பின்னடைவுக்கான காரணம் என அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார். (அ)

# ஆட்சி மாறுமா?

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது மாத்திரமன்றி, மஹிந்தவின் எதிர்கால வெற்றிகள் அனைத்தையும் தடுக்க வேண்டிய சட்டரீதியான ஏற்பாடுகள் அனைத்தையும் எடுக்க வேண்டியுள்ளது.

சுதந்திரக் கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்திவிட்டால் தாம் இலகுவாக வென்றுவிடலாம் என்று கனவு கண்ட ஐக்கிய தேசிய கட்சி அந்தப் பிளவை ஏற்படுத்தியது. தேசிய அரசிற்குள் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டது. இனி அவ்வாறு இருக்க முடியாது.தேசிய அரசை பலப்படுத்தினால்தான் தனக்கு வாழ்வு என்ற நிலை ரணிலுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆனால், தேசிய அரசை தொடர்ந்தும் நடத்திச் செல்வதற்கு மைத்திரி அணியில் உள்ள உறுப்பினர்கள் பலர் இடம்கொடுக்கமாட்டார்கள். தேர்தலுக்கு முன்பே மஹிந்தவை இணைப்பதற்கு முயற்சி செய்த மைத்திரி அணியினரின் செயற்பாடு இனி தீவிரமாகும். பிரதமர் பதவியை மஹிந்தவுக்கு வழங்கி இரு தரப்பையும் ஒன்றுபடுத்த வேண்டும் என்ற கோசம் மைத்திரி தரப்பில் பலமாக வைக்கப்படும்.

ஆட்சியில் இருக்கின்ற சுதந்திரக் கட்சி இப்போது சில இடங்களில் மூன்றாம் இடத்துக்கும் சில இடங்களில் ஜேவிபியை முன்தள்ளி நான்காம் இடத்துக்கும் தள்ளப்பட்டுள்ளது. மைத்திரி தரப்பை பொறுத்தவரை ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து தேசிய அரசைப் பலப்படுத்துவதை விடவும் மஹிந்த அணியுடன் இணைவதன்மூலம்தான் சுதந்திரக் கட்சியை முதலாம் இடத்துக்கு கொண்டு வர முடியும்.அதுதான் உண்மை.

ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்திருந்தால் சுதந்திரக் கட்சி உருப்படாது என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன.2015 ஜனாதிபதி தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் சுதந்திரக் கட்சிக்கு இருந்த செல்வாக்கு இப்போது இல்லை. சுதந்திரக் கட்சிக்கு அப்போது கிடைத்த ஆசனங்கள்கூட மஹிந்தவின் தயவால் கிடைத்ததுதான் என்பது இப்போது புரிகின்றது.

ஐக்கிய தேசிய கட்சி புரிந்த பிணை முறி மோசடி போன்ற திருட்டுக்களால்–அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருந்ததால் மக்கள் தன்னைத் தண்டித்துவிட்டார்கள் என்று மைத்திரி இப்போது உணர்வார் என்று தோன்றுகின்றது.

தனது மாவட்டத்தில்கூட சரியான வெற்றியை மைத்திரியால் பெற முடியவில்லை. வெற்றிபெற்ற சில சபைகளில்கூட 50வீத பெரும்பான்மை இல்லை. ஐக்கிய தேசிய கட்சி, ஜேவிபி மற்றும் சுதந்திரக் கட்சி ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்தால்கூட ஆட்சி அமைக்க முடியாத அளவுக்கு மஹிந்தவின் கட்சி 50 வீதத்துக்கு மேற்பட்ட பெரும்பான்மையை பெற்றுள்ளது.

ஆகவே,சுதந்திரக் கட்சியினதும் ஐக்கிய தேசிய கட்சியினதும் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. மூன்று வருடங்களுக்குள் இந்த கட்சிகளுக்கு இப்படியொரு வீழ்ச்சி வருமென்றோ மஹிந்த இப்படி எழுச்சிகொள்வார் என்றோ எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. இந்த நிலை ஏற்படுவதற்கான உண்மையான காரணத்தை கண்டுபிடித்து அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்காவிட்டால் ஐக்கிய தேசிய கட்சியினதும் சுதந்திரக் கட்சியினதும் நிலை அதோகெதிதான்.

இந்தத் தேர்தல் முடிவுகளை அடுத்து அரசியல் அரங்கில் எதிர்பாராத பல மாற்றங்கள் ஏற்படப் போவது நிச்சயம். தங்களின் அரசியல் நலன்களுக்காக நண்பர்கள் எதிரிகளாகவும் எதிரிகள் நண்பர்களாகவும் மாறுவதற்கும் வாய்ப்புகள் உண்டு. பொறுத்திருந்து பார்ப்போம்.

**- காவியன்-**



## நடந்தது நன்றாகவே நடந்திருக்கிறது. எல்லாம் நன்மைக்கே?

ஒரு மாதிரி எலக்சன் முடிஞ்சிது. அடி தடி ஒண்டும் எங்கடை பக்கத்திலை நடக்கேல்லை. அங்கங்கை கூட்டமா நிண்ட பெடியளை எல்லாம் அப்பப்ப வந்து பொலிஸ் கலைச்சபடி நிண்டினம். அவங்களைக் கலைக்கலாமே? பொலிஸ் போக மற்றவளத்தாலை அவங்கள் வந்து நிண்டு கத்திக் குளறிக் கொண்டு நிண்டாங்கள்.

பிறகு இராத்திரி முடிவு அறிவிச்சாப் பிறகு வெடி கொளுத்தி ஆரவாரம் செய்தபடி நிண்டவங்கள். இராத்திரி வெகு நேரமா நிண்டவங்கள் பிறகு போத்திலும் எடுத்தவங்களாம். அப்பிடியே போட்டாங்கள். காலமை ஒரு குருவியையும் வெளியிலை காணேல்லை.

நான் மத்தியானம்போலை வெள்ளை கடைப்பக்கம் அரிசிமாப் பைக்கற் ஒண்டு வாங்கப் போன்னான். அப்ப பாக்கியம் அதிலை வந்தாள். கன நாளைக்குப் பிறகு கண்டபடியாலை பத்தும் பலதையும் கதைச்சவள். அவளின்ரை சொந்தக்காரப் பெடி ஒண்டும் எலக்சன் கேட்டவன். என்ன அவன் வெண்டிட்டானோ? எண்டு கேட்டதுக்கு " உதொண்டும் நான் கேக்கிறேல்லை. எனக்குத் தெரியவும் மாட்டுது" எண்டு படக் கெண்டு சொன்னாள். "அப்ப ஆருக்கு நீ போட்டனி" எண்டு கேட்டன். "நான் வோட்டுப் போடப் போகேல்லை" எண்டாள். "ஏன்" எண்டு கேட்டன். "பாங்கிலை வேலை செய்யிற தன்ரை மேள் சொன்னவளாம். இப்ப கொஞ்ச வருசமா ஒருத்தரும் இல்லாமல் தானே? றோட்டும் போட்டவங்கள். றோட்டுக்கு லையிற்றும் போட்டவங்கள். குப்பையும் அள்ளினவங்கள். எல்லாம் நடந்திது. உவை புதுசா அங்கை போய் ஒண்டும் செய்யப்போறேல்லை. இன்னும் போய்க் குளப்படி விடுவங்களே ஒழிய நல்லதா ஒண்டும் செய்யாங்கள்" எண்டு சொன்னவளாம். அதாலை தான் போடேல்லை. எண்டு வலு சாதாரணமாச் சொல்லுறாள்.

உப்பிடி பிழையா விசியத்தை விளங்கிக் கொண்ட சனங்கள் தான் முப்பத்தேழு வீதம் வோட்டைப் போடாமல் வீட்டிலை வைச்சிருக்கினம். தங்கடை உரிமை என்னெண்டதையும், அதாலை வரப்போற நன்மை என்னெண்டதையும் அறியாமல் கனபேர் இருக்கிறதாலை எவ்வளவு பிரச்சினை வரும் எண்டு தெரியுமே? உந்தப் பொறுப்பில்லாத சனத்தாலைதான் தகுதி இல்லாத எல்லாரும் பதவிக்கு வருகினம். வந்து உதவொத்த வேலையையும் செய்து நாட்டுக்கு பெரிய இழப்புகளையும் ஏற்படுத்துவினம். உதாலை கூட இருக்கிறவைக்கும் பெரிய பிரச்சினையெல்லே?

இப்ப பாக்கிற நேரம் அந்த வோட்டுப் போடாத முப்பத்தேழு வீதமும் போட்டிருந்தால் ஆரோ தன்னும் வந்து வலு ஆரோக்கியமா ஆட்சி செய்யக் கூடியதாக இருந்திருக்கும். இப்ப தொங்கு சபையைத்தானே அமைக்கலாம். அப்பிடி அமைச்சு திட்டங்களைப் பாசாக்கப் போக மற்றவங்கள் விடாங்கள். குழப்பிக் கொண்டிருப்பங்கள். எவ்வளவு குழப்பமான வேலை தெரியுமே? உதாலை பாதிக்கப்படப் போறது பொதுசனந்தான். இலாபமடையப் போறது அரசியல்வாதி.

மற்றது வோட்டுப் போடாத சனம் ஏன் போட்டுப் போடேல்லை எண்டதைக் கட்டாயம் கண்டறிய வேணும். அவை ஏன் மௌனமா இருந்தவை.? ஏன் வோட்டுப்போட அவைக்கு விருப்பமில்லை. அவை கட்சியிலை ஏன் நம்பிக்கை வைக்கேல்லை? புதுசாக் கேட்ட புதுப்பெடியளுக்கு ஒரு சந்தர்பத்தைக் குடுக்கிறதுக்காகத்தன்னும் போட்டிருக்கலாமே? போட்ட சனங்களும் வழமைக்கு மாறாத்தான் வோட்டைப் போட்டிருக்கினம். வீட்டுக்குப் போடுறவையும் இந்த முறை கனபேர் மாறிச் சைக்கிளுக்குப் போட்டிருக்கினம். என்னெண்டாலும் வீட்டிலை கேட்டது நாலு ஐஞ்சு கட்சி எல்லே? சைக்கிள் தனசிசெல்லே உந்தளவு வோட்டை எடுத்திருக்கினம். அது ஒரு வெற்றிதான்.

வீட்டுக்காறர் மாவையோடை உதைக் கதைக்க வேணும். சுமந்திரன் தலை எடுத்ததும் சனத்துக்கப் பிடிக்கேல்லை எண்டும் சொல்லினம். அவர் ஆக்களைத் தூக்கி எறிஞ்சு பிஸினஸ் கதை கதைச்சதும் சனத்துக்குப் பிடிக்கேல்லை. உவர் பேப்பர் காறரோடையும் கொளுவலெல்லே? அவங்களோடையும் ஆரேன் யாரி கதைச்சுச் சண்டை பிடிப்பினமே? "எல்லாம் நன்மைக்குத்தான்" எண்டு முதலி சொல்லுறான். பாப்பம்!

**- வில்லங்கம் விநாசி**

## கொழும்பு மாநகர சபையின் முதல் பெண் மேயர் ரோஸி



கொழும்பு, பெப்.12

கொழும்பு மாநகரசபையை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியுள்ளது. கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் 131,353 வாக்குகளுடன் ஐதேக 60 ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கிறது.

மகிந்த ராஜபக்சவின் தலைமையிலான சிறிலங்கா பொதுஜன முன்னணி 60,087 வாக்குகளுடன், 23 ஆசனங்களைப் பிடித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 31,421 வாக்குகளுடன், 12 ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கிறது.

கொழும்பு மாநகரசபையில் 60 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ள ஐதேக ஏற்கனவே தமது மாநகர முதல்வர் வேட்பாளராக ரோசி சேனநாயக்கவை, அறிவித்திருந்தது.

அவர் கொழும்பு மாநகரசபையின் முதல் பெண் முதல்வராக பொறுப்பேற்கவுள்ளார். (அ)

## பிரதமர் பதவி வேண்டாம்

கொழும்பு, பெப்.12

" நான் ஒருபோதும் பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை" என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியது.

இது தொடர்பில் தனக்கு நெருக்கமான ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள மகிந்த தனது தீர்மானத்தை அறிவித்துள்ளார்.

"ஒருபோதும் பிரதமர் பதவியை நான் ஏற்றுகொள்ளப்போவதில்லை . தற்போது நடைபெற்றது உள்ளூராட்சி தேர்தல் மாத்திரமே தவிர பிரதமரைத் தெரிவு செய்யும் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவில்லை என்பதனால் நான் இவ்வாறான நிலைப்பாட்டுக்கு வந்துள்ளேன். எப்படியிருப்பினும் எதிர்க்கட்சித் தலைமைப் பதவி கூட்டு எதிர்க்கட்சிக்கு கிடைக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு" எனவும் மகிந்த மேலும் தெரிவித்துள்ளார்.(அ)



## அரசியலில் திடீர் மாற்றம் அடுத்த சில நாட்களில்?

கொழும்பு, பெப்.12

தேர்தல் முடிவுகளின் பிரகாரம் அடுத்த சில நாட்களில் நாட்டில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தப்போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைச்சர்கள் கூட்டத்தின் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறியதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்றுத் தெரிவித்துள்ளார். "தெளிவான மாற்றம் ஒன்றை நாட்டில் ஏற்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். உள்ளூராட்சி மன்ற தேர்தல் பெறுபேறுகளுக்கு அமைவாகவே அந்த மாற்றத்தினை கொண்டுவரவுள்ளதாக ஜனாதிபதி எம்மிடம் தெரிவித்துள்ளார்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## 2020 வரை தேசிய அரசு

கொழும்பு, பெப்.12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையின் கீழான தேசிய அரசாங்கத்தினை 2020ஆம் ஆண்டுவரை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளியாகியுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் முடிவுகளையடுத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன், அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இது குறித்துத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த தேர்தல் முடிவுகள் தேசிய அரசாங்கத்துக்கு வழங்கியுள்ள தகவலை அவதானத்தில் எடுத்துக்கொண்டு எதிர்வரும் நாட்களில் சில பல மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பான முடிவுகளை எடுப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (அ)

## தொடர்ச்சிகள்

**ஒன்றிணைய...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலின் முடிவுகள் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார்.

"இந்தத்தேர்தலில்வடக்குகிழக்கில்8மாவட்டங்களிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பானது போட்டியிட்டிருந்தது. 56 சபைகளில் போட்டியிட்ட நிலையில் அவற்றில் 40 சபைகளில் கூட்டமைப்பானது முன்னிலையில் உள்ளது. தற்போது வெளியாகியுள்ள முடிவுகளின் அடிப்படையில் பார்க்கின்ற போது வடக்கு கிழக்கில் 7 மாவட்டங்களில் கூட்டமைப்பானது மிகப் பெரிய வெற்றி பெற்றுள்ளது.

அதே நேரம் தெற்கில் பெரும் சூறாவளி ஏற்பட்டது போன்று ஐக்கிய தேசிய கட்சி மற்றும் சிறிலங்கா சிதந்திர கட்சி போன்றன படு தோல்வியடைந்து மகிந்த அணி மிகப்பெரிய வெற்றி பெற்றுள்ளது. அவற்றோடு ஒப்பிடும் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பானது பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. கடந்த 2015 ஆம் ஆண்டு தேர்தலோடு ஒப்பிட்டு பார்க்கும் போது வடக்கு கிழக்கில் யாழ்ப்பாணத்தை விட ஏனைய மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான வாக்குகள் அதிகரித்துள்ளன.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கான வாக்கானது பின்னடைவு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸைப் பொறுத்த வரையில் முக்கிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு யாழில் ஏற்பட்ட பின்டைவு குறித்து நாம் ஆராய்ந்து அவற்றைக் களைவதற்கான நடவடிக்கையை எடுப்போம்.

இந்த உள்ளூராட்சித் தேர்தலானது தெற்கிலே ஏற்படுத்தியுள்ள மாற்றமானது தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதிலே பேரிடியாக வந்துள்ளது. குறிப்பாக புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையை நிராகரிக்கின்ற மக்கள் ஆணையாக இந்தத் தேர்தலை சில கட்சிகள் பிரசாரம் செய்திருந்தன. இருந்த போதிலும் தமிழ் மக்கள் அவ்வாறு நிராகரிக்கின்ற வகையில் வாக்களிக்காததுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு யாழில் ஏற்பட்ட பின்னடைவும் அதனால் ஏற்பட்டதல்ல.

அதேபோன்று மகிந்த அணியானது குறித்த புதிய அரசியலமைப்பின் ஊடாக நாடு இரண்டாகப் பிளவுபடப் போகின்றது எனப் பிரசாரம் செய்த நிலையில் , சிங்கள மக்கள் தற்போதுள்ள அரசாங்கத்தை நிராகரிக்கின்ற வகையில் வாக்களித்துள்ளனர்.

குறிப்பாக தெற்கில் ஏற்பட்டுள்ள இம் மாற்றமானது தமிழ் மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வான புதிய அரசியலமைப்பைப் பெற்றுக்கொள்வதில் சவால்களை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலையில் புதிய அரசியலமைப்பு தொடர்பாக வெளியாகியுள்ள இடைக்கால அறிக்கையிலே நாம் சில சொற்களின் அர்த்தம் தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருக்க, அதே புதிய அரசியலமைப்பு நாட்டை பிரிக்க போகின்றது என்ற அடிப்படையில் அதனை சிங்கள மக்கள் நிராகரித்துள்ளார்கள்.

எனவே தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வொன்றை காணும் வகையில், குறித்த ஒரே கொள்கையின்பால் அதாவது சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற கொள்கையில் பயணிக்கின்ற கட்சிகள் தற்போது ஒன்றாகச் சேர்ந்து பயணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில் மகிந்த அணியால் தெற்கில் ஏற்பட்டுத் தப்பட்டுள்ள பெரும் மாற்றத்தை கருத்தில் எடுத்து, எமக்கு இடையேயான தனிமனித விருப்பு வெறுப்புக்களை கைவிட்டு, ஒரே திசை நாம் ஒன்று சேர்ந்து பயணிக்க வேண்டும் "எனவும் அவர் தெரிவித்தார். (அ)

**குப்பிளானில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணும் அதிகாரிகள், திருவுளச் சீட்டுக் குலுக்கிப் போட்டு முடிவை அறிவித்தனர்.

சீட்டுக் குலுக்கலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (அ)

**நாடாளுமன்றத்துக்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட சகல நடவடிக்கைகளுக்கும் எதிராக, நாட்டு மக்கள் மொட்டுடன் ஒன்றிணைந்துள்ளனர்"என நாமல் குறிப்பிட்டுள்ளார். (அ)

**வீடும் சைக்கிளும்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தி புரிந்துணர்வு ஆதரவு அடிப்படையில் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளதாக நம்பகமாகத் தெரியவருகின்றது.

இதனை உறுதி செய்வது போல, கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் "தமிழ் மக்களது பிர்ச்சினைகளுக்கு தீர்வொன்றை காணும் வகையில், அதற்கான தீர்வாக சமஷ்டி அடிப்படையிலான புதிய அரசியலமைப்பு ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக, அதே கொள்கையில் பயணிக்கின்ற தமிழ் கட்சிகள் தற்போது ஒன்றாகப் பயணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது" என்று அழைப்பு விடுத்துள்ளார். இதற்குச் சில நிபந்தனைகளின் அடிப்படையில் கூட்டமைப்போடு இணையலாம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பதிலளித்துள்ளது. எனவே இந்த இரு கட்சிகளுக்கும் இடையிலான இணைப்புச்சாத்தியம்ாகலாம் என்று கூறப்படுகின்றது. (அ)

**மைத்திரி...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஏனைய அமைச்சர்களுக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கத் தெரியாது என நாட்டின் பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். நாட்டைப் பிரிவுப்படுத்தும் அரசியலமைப்பைக் கொண்டு வந்தமை, உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளால் கடன்பட்டிருந்த மக்களின் கோபம் தேர்தல் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மூலம் அரசாங்கத்தை தோற்கடித்து எதிர்கட்சி ஒன்று வெற்றி பெற்ற சம்பவமானது இதற்கு முன்னர் இலங்கையின் வரலாற்றில் என்றுமே இடம்பெற்றதில்லை" எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

**கூட்டமைப்போடு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைகளும், ஒட்டு மொத்தமாக தமிழ் தேசிய கூட்டமைப்பின்தலைமைகளுமாகஉள்ளவர்களும், கூட்டமைப்பை விட்டு வெளியேறினால், நாம் கூட்டமைப்போடு சேர்ந்து பயணிப்போம்" என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக நேற்று மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உறுதியாகத் தேசியத்தோடு இருப்பார்கள் என்ற நம்பிக்கை 2009 மே மாதம் 18 ஆம் திகதிக்குப் பின்னரும் எமக்கு இருந்தது. ஆனால் அந்த நம்பிக்கைக்குத் துரோகமிழைக்கின்ற பல சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தையடுத்து, அதனை தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்ற காரணத்தினாலேயே நாம் 2010 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறியிருந்தோம்.

இவ்வாறான நிலையில் நாம் முன்வைத்த கருத்துக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான எரிச்சல் காரணமாகவோ, விரக்தியின் காரணமாகவோ அல்ல. அவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான கொள்கை ரீதியான விமர்சனங்களேயாகும். இவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றி அவர்களுக்குத் துரோகமிழைத்து ஒற்றையாட்சிக்கு இணங்கி, பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுத்து, இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் செயற்பட்டு வருகின்றார்கள் என்ற அடிப்படையின் காரணமாகவே நாம் முன்வைத்த கருத்துக்கள் கடுமையானதாக இருந்தன.

இதேநேரம் நாம் இன்னுமொரு விடயத்தையும் மிகத் தெளிவாகக் கூறிவந்துள்ளோம். அதாவது நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ அல்லது அதன் பங்காளி கட்சிகளுக்கோ எதிராகச் செயற்படுகின்றவர்கள் அல்ல. ஆயினும் அவர்கள் தமிழ் மக்களுக்குச் செய்கின்ற துரோகங்களை மக்கள் மத்தியில் வெளிப்படுத்துகின்றவர்களாகவே இருக்கின்றோம் என்பதை மிகத் தெளிவாகக் கூறி வந்துள்ளோம். இந்நிலையில் இன்று தமிழ் மக்கள் மிகப்பெரிய மாற்றத்துக்கு அடித்தளம் ஒன்றைப் போட்டிருக்கின்றார்கள்.

இவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியப் பேரவையின் கொள்கையை-உண்மையின் அடிப்படையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கொள்கையாக இருந்த கொள்கையை - ஏற்றுக்கொண்டு நேர்மையான ஊழலற்ற, ஆட்சியை நடத்தி புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கு நாம் ஒன்றாக தமிழ் தேசிய கூட்டமைப்போடு இணைந்து செயற்பட த்தயாராகவே இருக்கின்றோம்.

ஆனால் அவ்வாறு நாம் இணைந்து செயற்பட வேண்டுமாயின் தமிழ் மக்களை ஏமாற்றி அவர்களை நடுத்தெருவுக்கு கொண்டு வந்துவிட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமைகளும், அவர்களது தீர்மானங்கள் எல்லாவற்றுக்கும் ஆமோதித்து ஏற்றுக்கொண்ட கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைமைகளும் கூட்டமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டாலே நாம் கூட்டமைப்போடு இணைந்து செயற்பட முடியும். அதுவரை கூட்டமைப்போடு ஒருமித்து பயணிக்க முடியாது.

இதேவேளை இந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களில், தூய்மையான அரசியலை உருவாக்கத் தயாராகவுள்ளவர்கள் எம்மோடு இணைந்து தமிழ்த் தேசியப் பேரவையின் தரப்பாக செயற்பட விரும்பினால், அவர்களை அரவணைக்க நாம் தயாராகவே இருக்கின்றோம்.

• அதேநேரம் கூட்டமைப்பின் கொள்கைகளை விடவும் மிக மோசமான கொள்கைளை உடைய ஏனைய எந்தக் கட்சிகளுடனும் குறிப்பாக அது ஈ.பி.டி.பி கட்சியாக இருந்தாலும் நாம் அவர்களோடு சேர்ந்து செயற்படப் போவதில்லை. ஆனால் ஈ.பி.டி.பி கட்சியின் கொள்கையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கொள்கையும் ஒன்றாகவே உள்ளன. இருப்பினும் ஈ.பி.டி.பி அதனைப் பகிரங்கமாகக் கூறுகின்றது, தமிழ் தேசிய கூட்டமைப்பு பகிரங்கமாக அதனைக் கூறவில்லை" எனவும் அவர் தெரிவித்தார்.(அ)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள்

## மன்னார்

| முசலி பிரதேச சபை | | |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 5,427 | 07 |
| முஸ்லிம் காங்கிரஸ் | 3,225 | 04 |
| அகில இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 1,174 | 02 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 1,041 | 01 |
| பொதுஜன பெரமுன | 348 | 01 |
| நல்லாட்சிக்கான தேசிய முன்னணி | 295 | 01 |

| மன்னார் நகர சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 4,355 | 7 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 3,424 | 4 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,231 | 2 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 903 | 1 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 409 | 1 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 395 | 1 |

| மன்னார் பிரதேச சபை | | |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 884 | 7 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 5,029 | 7 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1,995 | 2 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 1,517 | 2 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 1,229 | 1 |
| தமிழர் விடுதலை கூட்டணி | 1,118 | 1 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 624 | 1 |

## வவுனியா

| வவுனியா வடக்கு பிரதேச சபை | | |
|---|---|---|
| அகில இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 2,794 | 08 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 1,870 | 05 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,370 | 03 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 1,254 | 02 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,124 | 03 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 973 | 02 |
| மக்கள் விடுதலை முன்னணி | 303 | 01 |
| ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி | 246 | 01 |

| வெங்கல செட்டிக்குளம் பிரதேச சபை | | |
|---|---|---|
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 2,923 | 04 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,802 | 04 |
| அகில இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 2,671 | 04 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 2,091 | 03 |
| முஸ்லிம் காங்கிரஸ் | 1,002 | 01 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 602 | 01 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 453 | 01 |
| ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி | 246 | 01 |

| வவுனியா நகர சபை | | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 5,259 | 8 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 2,103 | 3 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,887 | 3 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,869 | 4 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 844 | 1 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 627 | 1 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 445 | 1 |
| ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி | 246 | 01 |

| வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை | | |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 3,916 | 08 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,178 | 04 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 1,223 | 02 |
| மக்கள் விடுதலை முன்னணி | 923 | 01 |

# கூட்டமைப்பு கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள்




- மைந்தன் சிவா-

1.கூட்டமைப்பின் உட்கட்சி விவகாரங்கள் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தன. முக்கியமாக கட்சிக்குள் இருந்தவாறே அருந்தவபாலனும் விக்கினேஸ்வரனும் கட்சியெதிர் அரசியலுக்குள் இறங்கிவிட்டார்கள் என்று தெரிந்தபோதே அவர்களை விலக்கியிருக்க வேண்டும். அல்லது சரிசெய்திருக்க வேண்டும்.

2.அருந்தவபாலன் போன்ற மக்கள் ஆதரவு பெற்ற பிரமுகரை பகைத்துக் கொள்கின்ற சமயம் அதனை நியாயப்படுத்தும் விதமாக மாற்றுத் தெரிவு அமைந்திருக்க வேண்டும். பொருத்த மற்றொரை நிறுத்தினால் என்னாகும் என்பதற்கு இதுவொரு பாடம். திருந்தினால் பாடம், இல்லாவிட்டால் உங்கள் இஷ்டம்.

3.கொள்கைக்காக முன்னணியை தெரிவு செய்து வாக்களித்தவர்கள் எத்தனை பேரென்று தெரியாது. ஆனால், கூட்டமைப்பின் சில விளையாட்டுப்போக்குகளிற்கான கடிவாளமாய் இருக்கட்டுமென்று அதிருப்தியில் சென்ற வாக்குகள் அதிகம்.

4.முன்னணியினர் மக்கள் மத்தியில் இறங்கி உழைத்ததன் பலன் இது. அத்துடன் வேட்பாளர் தெரிவு நன்றாக அமைந்திருந்தது. என்னதான் கட்சி சார்ந்திருந்தாலும்,குறித்த பிரதேசத்தில் திறமையான ஒருவர் தேர்தலில் நிற்கும் பட்சத்தில் மக்கள் அவருக்கு வாக்களிக்கும் சாத்தியங்கள் அதிகம். இத் தேர்தல் முறையில் அது அதிக பலனை அறுவடை செய்துகொடுக்கும்.கொடுத்தது.

5.அதேயளவு போக்கு கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அமைந்திருந்தால்,முன்னணி ஒரு ஆசனத்தை பெற்றிருக்கலாம்.இப்போது ஒரு ஆசனத்தினை பெறும் வாய்ப்புடன் இருக்கிறார்கள்.அது யார் ஆசனம் என்பது தொடர்பில் கவனமெடுப்பது மற்றைய கட்சிகளுக்கு நல்லது.

6.கூட்டமைப்பின் தேசிய இனப்பிரச்சனை தொடர்பிலான அணுகுமுறையில் மக்கள் மத்தியில் அதிருப்தி பெரிதாக காணப்படவில்லை. அப்படி இருந்திருந்தால் நிலைமை தலைகீழாக அமைந்திருக்கும். போரால் அதிகம் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மக்களே கூட்டமைப்பிற்கு தங்கள் விருப்பை முழுமையாக வழங்கியிருப்பது அதற்கு சான்று. முன்னணியை முழுதாக நிராகரித்து இருக்கிறார்கள். சூரியனையும் சுரேஷாரையும் தான். மாறாக,இதுவொரு எச்சரிக்கை மணி என்பதாக கூட்டமைப்பு எடுத்துக் கொண்டு தன் நிர்வாக மற்றும் கட்சி சார் விடயங்களை சீரபடுத்தி செம்மைப் படுத்த வேண்டிய கட்டாயம் இது.

7.செய்வது முக்கியமல்ல, அதனை மக்களிடம் கொண்டு சேர்ப்பதுதான் முக்கியம் என்பதை கூட்டமைப்பினர் உணர்ந்திருப்பார்கள். மக்களுடன் கூடிய தொடர்பாடலும் தகவலறிதலும் அவசியம். அதற்கு முறையான கட்டமைப்பை கூட்டமைப்பு ஏற்படுத்த வேண்டும்.

8.கட்சிகளை தவிர்த்து, உள்ளூராட்சி சபை என்பதால் தங்கள் பிரதேசத்தில் சிறந்த தெரிவு யாரென்று பார்த்து, தங்கள் பிரதேச நலனை முன்னிலைப்படுத்துபவர்களை மக்கள் தெரிவு செய்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கது. இது பாராளுமன்ற தேர்தலில் எத்தகைய தாக்கத்தை செலுத்தும் என்பது தொடர்பில் சந்தேகம்தான்.

9.மக்கள் எப்போதும்போல தெளிவாகவே இருக்கிறார்கள். அரசியல் கட்சிகள் தான் அவர்களை தங்கள் இஷ்டத்திற்கு இழுத்து வைத்து பயன்படுத்திக் கொள்கிறார்கள். இறுதியில் மீண்டும் மக்களே வெல்கிறார்கள்.

10.கூட்டமைப்பும் முன்னணியும் இணைந்து செயற்பட சாத்தியங்கள் இருக்கின்றனவோ தெரியவில்லை. ஆனால் இணையாமல் இருந்து,தேசிய கட்சிகளையும் ஒட்டுக்குழுக்களையும் ஓரங்கட்டி அவர்கள் வாக்குகளையும் தம்வசப்படுத்துவார்களேயானால், அதுதான் உண்மையில் சிறந்த முழுமையான மாற்றம்.

# மன்னாரிலும் தொங்குநிலை

மன்னார், பெப்.12

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் மன்னார் மாவட்டத்தில்மண்ணார் நகர சபை மற்றும்நான்கு பிரதேச சபைகளையும் தனிப்பட்ட முறையில் ஆட்சி அமைக்க எந்த கட்சியும் அறுதி பெரும்பான்மையைப் பெறவில்லை. இதனால் எந்தக் கட்சி ஆட்சி புரிய முனைந்தாலும் மாற்றுக் கட்சிகளின் ஆதரவைப் பெற வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில், முசலி பிரதேச சபையில் 16 உறுப்பினர்களில் ஐக்கிய தேசியக் கட்சி 07 உறுப்பினர்களும் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சி 04 உறுப்பினர்களையும் பெற்றிருப்பதால் இவர்களில் யாராவது ஆட்சி அமைக்க முற்படின் மாற்றுக் கட்சிகளை நாட வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்தச் சபை கடந்த முறை ஐக்கிய மக்கள் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் இருந்து வந்தது.

அடுத்து நானாட்டான் பிரதேச சபையில் 16 உறுப்பினர்களுக்கு இலங்கை தமிழரசுக் கட்சிக்கு 07 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 05 உறுப்பினர்களும் கிடைத்துள்ளதால், இங்கும் யாதேனும் ஒரு கட்சி ஆட்சி அமைக்க ஏனைய கட்சிகளின் ஆதரவு தேவையாகவுள்ளது.

மன்னார் நகர சபையில் மொத்தமுள்ள 15 உறுப்பினர்களில் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு 07 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 04 உறுப்பினர்கள் கிடைத்துள்ளதால், இங்கும் தொங்கு நிலையே ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று மன்னார் பிரதேச சபையிலும் மொத்தமுள்ள 21 உறுப்பினர்களில் இலங்கை தமிழரசுக் கட்சி 07 உறுப்பினர்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 07 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

இதனால் இங்கும் தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலை தொடர்கின்றது.

மாந்தை மேற்கு பிரதேச சபையிலும் மொத்தமுள்ள 25 உறுப்பினர்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும்பான்மையாக 11 உறுப்பினர்கள் இருக்கின்ற போதும் தனியாக ஆட்சியமைக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

இதேவேளை, குறித்த மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலிப் பிரதேச சபைகள் மூன்றும் முன்பு தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆட்சிக்குள் இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ)

# மொட்டும் சேவலும் சங்கமம்

நுவரெலியா, பெப்.12

நுவரெலிய மாவட்டத்தின் 11 உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மகிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியை அமைக்கவுள்ளதாக சீ.பீ.ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் வெற்றியின் பின்னர் ஹட்டன் நகரில் நேற்றுஇடம்பெற்ற நிகழ்வொன்றில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஆறுமுகன் தொண்டமானுடன் சீ.பீ. ரத்னாயக்கவும் கலந்துக்கொண்டார்.

சுமார் 13 வருடங்களுக்குப் பிறகு கிடைத்துள்ள இந்த மாபெரும் வெற்றியுடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து நுவரெலியா மாவட்டத்தின் 11 உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியமைத்து உயர்ந்த சேவையில் வழங்கவுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார். (அ)

# திருப்பியடித்தது தென்னாபிரிக்கா



## வெற்றி!

ஸ்பெய்ன், பெப்.12

ஸ்பானிய உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டிகளில், அத்லெட்டிகோ மட்ரிட், றியல் மட்ரிட் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

அத்லெட்டிகோ மட்ரிட், 1-0 என்ற கோல் கணக்கில் மலாகாவை வென்றது. அத்லெட்டிகோ மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை அன்டோனி கிறீஸ்மன் பெற்றார்.

றியல் மட்ரிட், 5-2 என்ற கோல் கணக்கில் றியல் சொஸைடட்டை வென்றது. றியல் மட்ரிட் சார்பாக, கிறிஸ்டியானோ றொனால்டோ மூன்று கோல்களையும் லூகாஸ் வஸ்கூஸ், டொனி க்றூஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர். றியல் சொஸைடட் சார்பாக, ஜொான்.பட்டிஸ்டா, அசியர் இலரெமெண்டி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். (அ)

ஜொஹன்னஸ்பேர்க், பெப்.12

தென்னாபிரிக்க, இந்திய அணிகளுக்கிடையிலான ஆறு போட்டிகள் கொண்ட ஒருநாள்சர்வதேசப் போட்டித் தொடரில், ஜொஹன்னஸ்பேர்க்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நான்காவது போட்டியில், டக் வேர்த் லூயிஸ் முறைப்படி 5 விக்கெட்டுகளால் தென்னாபிரிக்கா வென்றது.

இந்தப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி, 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 289 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், ஷிகர் தவான் 109, விராட் கோஹ்லி 75 , மகேந்திர சிங் டோனி ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், லுங்கி என்கிடி, கஜிஸோ றபடா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு, 290 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, 7.2 ஓவர்களில் 1 விக்கெட்டை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மழை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. இதன்பின்னர், 28 ஓவர்களில் 202 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு தென்னாபிரிக்காவுக்கு வழங்கப்பட்ட நிலையில், 25.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில், ஹென்றிச் கிளாசென் ஆட்டமிழக்காமல் 43 , டேவிட் மில்லர் 39 , ஏ.பி டி வில்லியர்ஸ் 26, அன்டிலி பெக்லுவாயோ ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

## அப்ரிடிக்குப் பாராட்டு

சூரிச், பெப்.12

ரசிகர் ஒருவரை இந்தியத் தேசியக் கொடியை சரியாகப் பிடிக்க வைத்து, இந்தியர்களின் மனங்களை பாகிஸ்தான் வீரர் ஷாஹித் அப்ரிடி வென்றுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் செயின்ட் மோர்டிஸ் நகரில் இந்திய வீரர் சேவாக்கின் டைமன்ட் லெவன் அணிக்கும், ஷாஹித் அப்ரிடியின் ராயல்ஸ் அணிக்கும் இடையிலான ஐஸ் கிரிக்கெட் போட்டி நடந்தது.

இந்தப் போட்டியில் அப்ரிடியும் கலந்துகொண்டு விளையாடினார்.

இந்தப் போட்டியின் இடையே ஏராளமான ரசிகர்கள், ரசிகைகள் வீரர்களிடமும், ஆட்டோகிராப் வாங்கினர்.

பாகிஸ்தான் வீரர் ஷாஹித் அப்ரிடிக்கு பாகிஸ்தானில் மட்டுமல்லாமல், இந்தியாவிலும் ரசிகர்கள் ஏராளம். அந்த வகையில் அவரிடம் ஆட்டோகிராப் வாங்க இந்திய ரசிகர்கள் ஆர்வமாக இருந்தனர்.

அப்போது, ஒரு ரசிகை அப்ரிடியிடம் அணுகி தங்களுடன் செல்ஃபி எடுக்க வேண்டுகோள் விடுத்தார். அதற்குச் சம்மதம் தெரிவித்த அப்ரிடி செல்ஃபிக்கு தயாரானார். அப்போது, அந்த ரசிகை தனது கையில் இந்தியத் தேசியக் கொடியைச் சுருட்டிப்பிடித்து வைத்து இருந்தார்.

இதைப் பார்த்த அப்ரிடி அந்த ரசிகையை லேசாகக் கடிந்து கொண்டார். "தேசியக் கொடியை எப்போதும் மதிப்புடன் வைத்து இருக்க வேண்டும். அதைச் சுருட்டிப் பிடிக்க கூடாது. தேசியக் கொடியை நேராக விரித்துப் பிடியுங்கள், அதோடு சேர்த்து செல்ஃபி எடுக்கலாம்" என்று அந்த ரசிகையிடம் அப்ரிடி கூறினார். அதன்பின் இந்தியத் தேசியக் கொடியை அப்ரிடி ஒருபுறம் பிடித்துக்கொண்ட நிலையில் செல்ஃபி எடுத்துக் கொண்டார்.

இந்தியத் தேசியக் கொடியை அப்ரிடி கையில் பிடித்து செல்ஃபி எடுத்ததை அங்கிருந்த ரசிகர்கள் கைதட்டி பாராட்டி ஆரவாரம் செய்தனர்.

பாகிஸ்தான் வீரரான அப்ரிடி இந்தியத் தேசியக் கொடியை கையில் பிடித்து இருந்த புகைப்படம் சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவியது. அவருக்கு ஏராளமான ரசிகர்கள் பாராட்டுகளைத் தெரிவித்து வருகின்றனர். (அ)





## மன்செஸ்டர் வாகை!

லண்டன், பெப்.12

இங்கிலாந்து உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில், 1-0 என்ற கோல் கணக்கில் ஆர்சனலை டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் வென்றது. டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹரி கேன் பெற்றிருந்தார்.

இதேவேளை, மன்செஸ்டர் சிற்றி, 5-1 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றியை வென்றது. மன்செஸ்டர் சிற்றி சார்பாக சேர்ஜியோ அகுரோ நான்கு கோல்களையும் ரஹீம் ஸ்டேர்லிங் ஒரு கோலையும் பெற்றனர். லெய்செஸ்டர் சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜேமி வார்டி பெற்றிருந்தார். (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 12.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.